Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Questions:

கோடிட்ட இடங்களை நிரப்புக

1._____ ஆம் ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது.

2.1913ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட _____ உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.

3._____ ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது.

4.பால்கனில் _____ நாடு பல்வகை இனமக்களைக் கொண்டிருந்தது.

5.டானென்பர்க் போரில் _____ பேரிழப்புகளுக்கு உள்ளானது.

6.பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர்_____ ஆவார்.

7._____ ஆம் ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

8.ஜெர்மனிய அரசரின் பெயர் _____

9._____, _____ பகுதிகள் பிரான்சுக்கு திருப்பித் தரப்பட்டன

10.லெனினைக் கவர்ந்த சிந்தனையாளர்_____

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

11.முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை?
(a) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, உதுமானியர் (b) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, ரஷ்யா (c) ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தாலி
(d) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி

12.எவ்விடத்தில் எத்தியோப்பியாவின் படை இத்தாலியின் படைகளைத் தோற்கடித்தது?
(a) டெல்வில்லி (b) ஆரஞ்சு நாடு (c) அடோவா (d) அல்ஜியர்ஸ்

13.பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?
(a) சீனா (b) ஜப்பான் (c) கொரியா (d) மங்கோலியா

14."ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்?
(a) லெனின் (b) மார்க்ஸ் (c) சன் யாட் சென் (d) மா சே துங்

15.மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?
(a) ஆகாயப் போர்முறை (b) பதுங்குக் குழிப்போர்முறை (c) நீர்மூழ்கிக் கப்பல் போர்முறை (d) கடற்படைப் போர்முறை

16.எந்தநாடு முதல் உலகப்போருக்கு பின்னர் தனித்திருக்கும் கொள்கையைக் கைக்கொண்டது?
(a) பிரிட்டன் (b) பிரான்ஸ் (c) ஜெர்மனி (d) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

17.பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
(a) பிரிட்டன் (b) பிரான்ஸ் (c) டச்சு (d) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

18.பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது?
(a) ஜெர்மனி (b) ரஷ்யா (c) இத்தாலி (d) பிரான்ஸ்

19.முதல் உலகப் போரின் மாபெரும் விளைவு _____
(a) பசுமை புரட்சி (b) பிரெஞ்சுப்புரட்சி (c) ரஷ்யப் புரட்சி (d) அமெரிக்க புரட்சி

20.பத்தொன்பதாம் நூற்றாண்டில் சக்திகள் தங்கள் நலனுக்கான நாடுகளைச் சுரண்டின.
(a) ஆசியா (b) ஐரோப்பா (c) ஆப்பிரிக்கா (d) ஆஸ்திரேலியா

21._____ போரில் பிரெஞ்சுப் படைகள் ஜெர்மானியரை வெற்றி பெற்றன.
(a) டான்பெர்க் (b) டான்சிங் (c) மார்ன் (d) பால்கன்

22.கிழக்கு முனை _____ படைகள் ஆஸ்திரியப் படைகளை மீண்டும் மீண்டும் தோற்கடித்தன
(a) ரஷ்ய (b) ஆங்கிலேய (c) ஜப்பான் (d) பிரான்ஸ்

23.ரஷ்யாவும் _____ ம் பிரேஸ்ட் - லிட்டோவஸ்க் உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.
(a) இங்கிலாந்து (b) இத்தாலி (c) பிரான்ஸ் (d) ஜெர்மனி

24.ஷாண்டுங் மாகாணத்தில் சீனாவிற்கு ஜெர்மனியால் வழங்கப்பட்ட கியாச்சவ் பகுதியை _____ கைப்பற்றிக்கொண்டது
(a) ஜப்பான் (b) துருக்கி (c) ஸ்பெயின் (d) இத்தாலி

25._____ 1916 மே திங்களில் நேசநாடுகள் அணியில் இணைந்து போர்செய்தது
(a) இத்தாலி (b) ஜப்பான் (c) ரஷ்யா (d) ஆஸ்திரியா

26.ஜெர்மனியர்கள் இறுதியில் _____ ஆம் ஆண்டு நவம்பரில் சரணமடைந்தனர்
(a) 1914 (b) 1918 (c) 1920 (d) 1925

27.பாரிஸ் அமைதி மாநாடு நடைபெற்ற ஆண்டு _____
(a) 1917 (b) 1918 (c) 1919 (d) 1924

28.ஜெர்மனி 1919 ஆம் ஆண்டு ஜூன் 28ஆம் நாள் _____ உடன்படிக்கையில் வெர்செல்ஸ் கண்ணாடி மாளிகையில் கையெழுத்திடப்பட்டது
(a) பாரிஸ் (b) அமைதி (c) வெர்செய்ல்ஸ் (d) அலகாபாத்

29.ரஷ்யாவில் ஆட்சியைப் கைப்பற்றிய _____ கம்யூனிச அரசை நிறுவினார்
(a) ரூஸ்வெல்ட் (b) லெனின் (c) ஸ்டாலின் (d) முசோலினி

30.ஜெர்மனி போர் இழப்பீட்டு தொகையாக செலுத்த வேண்டிய பணம் _____
(a) 6600 மில்லியன் பவுண்டுகள் (b) 5500 மில்லியன் பவுண்டுகள் (c) 6800 மில்லியன் பவுண்டுகள் (d) 7200 மில்லியன் பவுண்டுகள்

31._____ இல் சார் இரண்டாம் அலெக்ஸாண்டர் பிள்ளை அடிமை முறையை ஒழித்து அவர்களை மீட்டார்.
(a) 1861 (b) 1865 (c) 1869 (d) 1875

32.உலக வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்த ஆண்டு
(a) 1939 (b) 1945 (c) 1914 (d) 1918

33.உலக அரசியல் வரைபடம் மீண்டும் வரையப்பட்டதற்குக் காரணமான போர்
(a) முதல் உலகப் போர் (b) அமெரிக்க சுதந்திரப் போர் (c) இரண்டாம் உலகப் போர் (d) ஏழாண்டுப் போர்

34.முதல் உலகப் போரின் மிகப் பெரும் விளைவு
(a) பிரெஞ்சுப் புரட்சி (b) ரஷ்யப் புரட்சி (c) சீனப் புரட்சி (d) தொழிற்புரட்சி

35.உலக முதலாளித்துவத்திற்குத் தலைமையாக விளங்கிய நாடு
(a) ஜப்பான் (b) ஜெர்மனி (c) அமெரிக்கா (d) இங்கிலாந்து

36.முதல் உலகப்போர் தொடங்கிய ஆண்டு
(a) 1914 (b) 1916 (c) 1918 (d) 1920

37.முதல் உலகப் போரில் நேசநாடுகளே வெற்றிபெறும் என்பதைத் தீர்மானித்த போர்
(a) வெர்டன் போர் (b) மார்ன் போர் (c) டானென்பர்க் போர் (d) பால்கன் போர்

38.ரஷ்யாவில் சார் மன்னருடைய ஆட்சி தூக்கி வீசப்படக் காரணமான புரட்சி
(a) ஜூலைப் புரட்சி (b) செப்டம்பர் புரட்சி (c) அக்டோபர் புரட்சி (d) மே புரட்சி

39.முதல் உலகப் போரின்போது விஷவாயுக் குண்டுகளை வீசிய நாடு
(a) அமெரிக்கா (b) ஜெர்மனி (c) இங்கிலாந்து (d) பிரான்ஸ்

40.சென்னை மீது குண்டுகளை வீசிய ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்
(a) லூசிடானியா (b) எம்டன் (c) செயின்ட் லூயிஸ் (d) டான்டன்

41.ஜெர்மனியால் மூழ்கடிக்கப்பட்ட அமெரிக்கக் கப்பல்
(a) லூசிடானியா (b) எம்டன் (c) செயின்ட் லூயிஸ் (d) டான்டன்

42.1917 ஆம் ஆண்டு ஜெர்மனிக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்த அமெரிக்க குடியரசுத் தலைவர்
(a) தாமஸ் ஜெபர்சன் (b) ஜார்ஜ் வாஷிங்டன் (c) ஆபிரஹாம் லிங்கன் (d) உட்ரோ வில்சன்

43.பதினான்கு அம்சத் திட்டத்தை முன்வைத்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர்
(a) உட்ரோ வில்சன் (b) ஜான் F. கென்னடி (c) தியோடர் ரூஸ்வெல்ட் (d) ரொனால்டு ரீகன்

44.முதல் உலகப்போருக்குப் பின்னர் உலகத்திற்கே கடன் கொடுக்கும் நாடாக மேலெழுந்த நாடு
(a) இங்கிலாந்து (b) அமெரிக்கா (c) ஜப்பான் (d) சீனா

45.துருக்கி மீண்டும் ஒரு நாடாக மறுபிறவி எடுப்பதற்குக் காரணமானவர்
(a) சுலைமான் (b) முகமது நாசர் (c) அப்துல்லா (d) முஸ்தபா கமால் பாஷா

46.ரஷ்யாவில் கம்யூனிச அரசை நிறுவியவர்
(a) லெனின் (b) ஸ்டாலின் (c) மார்க்ஸ் (d) சன்யாட்சென்

47.பன்னாட்டுச் சங்கத்தின் செயலகம் அமைந்திருந்த இடம்
(a) லண்டன் (b) தி ஹேக் (c) ஜெனீவா (d) பெர்லின்

48. பன்னாட்டு நீதிமன்றம் அமைந்திருந்த இடம்
(a) சிகாகோ (b) தி ஹேக் (c) ரோம் (d) டோக்கியோ

49.ஜெர்மனியை பன்னாட்டுச் சங்கத்திலிருந்து விலக்கிக் கொண்டவர்
(a) ஹிட்லர் (b) முசோலினி (c) விளாடிமிர் (d) ஜோசப் ஸ்டாலின்

50.பின்லாந்திற்கும், சுவீடனுக்குமிடையே பிரச்சனை ஏற்படக் காரணமான தீவுகள்
(a) பஹாமா தீவுகள் (b) கார்சிகா தீவுகள் (c) ஆலேண்டு தீவுகள் (d) லட்சத் தீவுகள்

QB365™ Study Material
QUESTION BANK 365